முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 952

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.05.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா
ஓங்கார சூட்சுமமே தேசிகா
ஓங்காரன் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 25 ம் நாள், 08.05.2022 ஞாயிற்றுக்கிழமை)
2. ஆசி தனை அரங்கன் வழி இந்த உலகம்
ஐயமற கடைத்தேற அருளுவேன்
வாசிவென்ற ஞானியர்களெல்லாம்
வல்லமைகூட்டி அரங்கனுள் இணைந்திருக்க
3. இருக்கவே ஞானம் தேடி அலையும்
இணையில்லா ஞான பெருமக்களே
தானதர்ம சக்தியோடு அரங்கன் காட்டும்
தயவான இந்த உண்மை ஞான வழியை
4. வழிதனை உலகோர் ஏற்றால் போதும்
வையகம் பெருமாற்றம் காணும்
தயவான சக்திகொண்டு உலகோரெல்லாம்
தரணியில் ஞானிகளாக மாறும் ஆற்றல்பெருகும்
5. பெருகவே அரங்கனே கலியின்
பிசகில்லாத வரம்பலபெற்ற ஞானி
திறம்பட அரங்கன் தொண்டு வழியும்
தேசிகன் செய்கின்ற தான தர்ம வழியும்
6. வழிதனில் உலகோர் வழிமொழிந்து
வழுத்திடுவேன் தடையற தொடர்ந்து வர
வருகவே பெருமாற்றம் சடுதி
வல்லமைபட வருவோரெல்லாம் ஞானிகளாகி
7. ஆகியே இனி பிறவாப்பெரும்பேறு
அரங்கன் வழி யாவருக்கும் கிட்ட நேரும்
நேர்மைகொண்டு அரங்கனுள் நிலமதனில்ஆறுமுகன் யான்
உரைத்திடுவேன் பெரும் சக்தியாக இயங்கி வர

8. வருகவே அரங்கனைக் கண்டு சேவித்தால்
வல்லமைபட ஆறுமுகன் என்
அருளாசியும் கண்டு தேற நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–